## 1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

[ப-உ] அன்னையும் - தாயாரும், பிதாவும் - தகப்பனாரும், முன் - முன்னே, அறி – அறியப்படும், தெய்வங்களாவார்.

(க-உ) தாயும், தந்தையும் முன்பு காணப்பட்ட தெய்வங்களாகும்.

## 2. ஆலயம் தொழுவது சாலவு நன்று.

[ப-உ] ஆலயம் – கோயிலுக்குச் சென்று, தொழுவது - கடவுளை வணங்குவது, சாலவும் – மிகவும், நன்று - நன்மையாம்

(க-உ) கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவது மிக்க நல்லது.

## 3. இல்லற மல்லது நல்லற மன்று.

[ப-உ] இல்லறம் - (மனைவியோடு கூடிச் செய்யும்) அறமானது, நல்லறம் - சிறந்த அறமாகும். அல்லது - இல்லற மல்லாததாகிய துறவறமானது, அன்று - சிறந்த அறமாகாது.

(க-உ) மனைவியோடு கூடிச் செய்யும் அறமே சிறப்புடையதாகும்.

(க-உ) ஒருவன் தன் ஊராருடன் பகை கொண்டால் அவன் வமிசத்தோடு அழிந்து விடுவான்.

## 7. எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்.

[ப-உ] எண்ணும் – கணக்கும், எழுத்தும் - இலக்கணமும், கண் எனத்தகும் - (மக்களுக்கு) கண்கள் என்று சொல்லப்படும்.

(க-உ) கணக்கும் இலக்கணமும் மக்களுக்குக் கண்கள் என்று சொல்லத்தகும்.

## 8. ஏவா மக்கண் மூவா மருந்து.

[ப-உ] ஏவா மக்கள் - பெற்றோர் இதனைச் செய்வாய் என்று ஏவுதற்கு முன்பே குறிப்பறிந்து செய்யும் மக்கள், மூவா – சாவாத் தன்மையை அளிக்கும், மருந்து - தேவாமிர்தம் போல்வார்.

(க-உ) பெற்றோர்கள் குறிப்பறிந்து நடக்கின்ற பிள்ளைகள் மிகச் சிறந்தவராவார்கள்.

## 9. ஐயம் புகினும் செய்வன செய்.

[ப-உ] ஐயம் புகினும் - பிச்சை யெடுத்தாலும், செய்வன - செய்யத் தக்கவைகளை, செய் - நீ செய்வாய்.

(க-உ) பிச்சையெடுத்துப் பிழைத்தாலும் நீ உன் கடமைகளைச் செய்வாயாக.

## 22. கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி.

[ப-உ] கைப்பொருள் தன்னின் - கையிலிருக்கின்ற செல்வத்தை பார்க்கிலும், மெய்ப்பொருள் - உண்மையான செல்வமானது, கல்வி – கல்வியே யாகும்.

(க-உ) திரவியத்தைக் காட்டிலும் கல்வியே உண்மையான பொருளாகும்.

## 23. கொற்றவ னரித லுற்றிடத் துறவி.

[ப-உ] கொற்றவன் - அரசனை, அறிதல் - ஒருவன் அறிந்திருத்தல், உற்றிடத்து - (அவனுக்கு ஆபத்து வந்து) பொருந்திய இடத்தில், உதவி - உதவியாகும்.

(க-உ) ஒருவனுக்கு அரசன் அறிமுகமாய் இருப்பது ஆபத்தில் உதவியாகும்.

உற்ற விடத்து என்பது உற்றிடத்து என விகாரப்பட்டது.

## 24. கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு

[ப-உ] கோள் செவி - கோள் கேட்கும் ஒருவனுடைய காதில், குறளை - (ஒருவன் சொல்லும்) கோள், காற்றுடன் - காற்றுடன் சேர்ந்த, நெருப்பு - நெருப்பைப் போல மூளும்.

(க-உ) கோள் கேட்பதற்கு விருப்பமுடையவன் காதில் சொன்ன கோட்சொல் காற்றால் வீசப்பட்ட நெருப்புப் போல அதிகமாக மூளும்.

## 32. செய்தவ மறந்தால் கைதவ மாளும்.

[ப-உ] செய்தவம் - செய்யும் தவத்தை, மறந்தால் - (ஒருவன்) மறப்பானாயின், கைதவம் - (அவனை) வஞ்சனையாகிய மாயை, ஆளும் - அடிமை கொள்ளும்.

(க-உ) ஒருவன் தவத்தைச் செய்யானாயின் அவனை மாயையானது அடிமை கொள்ளும்.

## 33. சேமம் புகினும் சாமத் துறங்கு.

[ப-உ] சேமம் புகினும் - காவல் செய்யுமிடத்திற்குச் சென் றாலும்,சாமத்து - நடு இரவில், உறங்கு - நித்திரை செய்.

(க-உ) நீ காவல் காக்கும் இடத்திலும் நடு இரவில் நித்திரை செய்வாய்.

## 34. சையொத் திருந்தால் ஐய மிட்டுண்.

ப-உ] சை - கைப்பொருள், ஒத்திருந்தால் - இசைந்திருந்தால், ஐயமிட்டு - பிச்சையிட்டு, உண் - உண்பாய். சை - ஓரெழுத்தொரு மொழி; பொருள்.

(க-உ) உன்னிடத்தில் பொருள் இசைந்திருந்தால், நீ பிச்சையிட்டு, உண்பாய்.

## 47. தோழனோடு மேழைமை பேசேல்.

[ப-உ] தோழனோடும் - உன்னுடைய நண்பனோடும், ஏழைமை பேசேல் - உனது வறுமையைப் பற்றிப் பேசாதே.

(க-உ) உனது வறுமையை உன் நண்பனிடத்திலும் நீ சொல்லாதே.

## 48. நல்லிணக்க மல்லது அல்லல் படுத்தும்.

[ப-உ] நல்லிணக்கம் அல்லது - நல்ல சேர்க்கை யல்லாதது, அல்லல் - துன்பத்தை, படுத்தும் - உண்டாக்கும்.

(க-உ) கெட்ட சேர்க்கை ஒருவனுக்குத் துன்பத்தைக் கொடுக்கும்.

## 49. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.

[ப-உ] நாடெங்கும் - தேசமெங்கும், வாழ - செழித்து வாழ, கேடொன்றும் - ஒருவித கெடுதியும், இல்லை - இல்லையாம்.

(க-உ) தேசமெங்கும் செழித்திருந்தால் ஒருவர்க்கும் ஒரு கெடுதியும் இல்லை.